**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No. 06/2024**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சூர்யா** | தொழில் | : கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : காமாட்சி | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : பூலத்தூர் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 28/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 19.05.2026 |

**( எதிரி மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் பூலத்தூரில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன் . இவ்வழக்கின் எதிரிகளான சந்திரமணிகண்டன், சோனியா, சுப்பன் ஆகியோர்களைத் தெரியும். எதிரிகள் எனது உறவினர்கள் ஆவர். தேதி நினைவில்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு மாலை சுமார் 07.00 மணியளவில் நான் எனது வீட்டில் உணவு அருந்திக்கொண்டிருந்தபோது எனக்கு மயக்கம் ஏற்பட்டு கீழே விழுந்து விட்டேன், அதில் எனக்கு இடது கண் பகுதி அருகே காயம் ஏற்பட்டது. நான் மயங்கிவிட்ட காரணத்தால் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்தபோது சந்தேகத்தின்பேரில் எதிரிகள் மீது புகார் கொடுத்துவிட்டேன் . எதிரிகள் என்னை தாக்கவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை . என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் , அதில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியாது.

**அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

கடந்த 31.03.2023ம் தேதி மாலை 06.00 மணியளவில் சந்திரமணிகண்டன் வீட்டின் முன்பு நடந்து சென்று கொண்டிருந்தபோது சந்திரமணிகண்டனிடம் ஏன் ஜீப்பை வழியில் நிறுத்தி வைத்தீர்கள் என்று கேட்டபோது எதிரி சந்திரமணிகண்டன் அவ்வாறுதான் வாகனத்தை நிறுத்துவேன் என்றுச் சொல்லி ஆபாசமாக திட்டி என்னை நெஞ்சில் எட்டி உதைத்து கீழே தள்ளி கற்களைக் கொண்டு எனது இடதுப்பக்க கண்ணிற்கு மேல்பகுதியில் குத்தினார் என்றாலும் , எதிரி சந்திரமணிகண்டனுடன் சேர்ந்துகொண்டு எதிரி சோனியா மற்றும் சுப்பன் ஆகியோர் ஒன்றுசேர்ந்து என்னைத் தாக்கி கீழே தள்ளி அதில் நான் மயக்கம் அடைந்தேன் என்றாலும் , பிறகு எனது ஊரைச் சேர்ந்த பொதுமக்கள் உதவியுடன் என்னை மீட்டு பூலத்தூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றாலும், பிறகு மேல்சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டேன் என்றாலும் , மேற்சொன்ன சம்பவம் குறித்து புகாரிலும் , போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது தந்தை வழி உறவினர்கள் என்பதால் அவர்களுடன் நான் சமாதானமாக சென்றுவிட்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக , வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.05.19 14:55:38 +0530

District Munsif Cum Judicial Magistate No.I, Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**
**கொடைக்கானல்.**

**CC.No. 06/2024**

**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **: காமாட்சி** | தொழில் | : கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : திருமான் | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : பூலத்துார் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 50/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 19.05.2026 |

**( எதிரி மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**முதல் விசாரணை:**

நான் பூலத்துாரில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன் . அ.சா.1 சூர்யா எனது மகன் ஆவார் . வழக்கு குறித்து எந்த விபரமும் தெரியாது . போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

கடந்த 31.03.2023ம் தேதி மாலை 06.00 மணியளவில் சந்திரமணிகண்டன் வீட்டின் முன்பு அ .சா.1 சூர்யா நடந்து சென்று கொண்டிருந்தபோது சந்திரமணிகண்டனிடம் ஏன் ஜீப்பை வழியில் நிறுத்தி வைத்தீர்கள் என்று அ.சா.1 கேட்டபோது எதிரி சந்திரமணிகண்டன் அவ்வாறுதான் வாகனத்தை

நிறுத்துவேன் என்றுச் சொல்லி ஆபாசமாக திட்டி அ .சா.1 ஐ நெஞ்சில் எட்டி உதைத்து கீழே தள்ளி கற்களைக் கொண்டு அ.சா.1 இடதுப்பக்க கண்ணிற்கு மேல்பகுதியில் குத்தினார் என்றாலும், எதிரி சந்திரமணிகண்டனுடன் சேர்ந்துகொண்டு எதிரி சோனியா மற்றும் சுப்பன் ஆகியோர் ஒன்றுசேர்ந்து அ .சா.1 ஐ தாக்கி கீழே தள்ளி அதில் அ.சா.1 மயக்கம் முற்றார் என்றாலும், பிறகு எனது ஊரைச் சேர்ந்த பொதுமக்கள் உதவியுடன் அ .சா.1 ஐ மீட்டு பூலத்தூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல . எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் எதிரிக்கு ஆதரவாக , வழக்கிற்கு விரோதமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.05.19 14:55:47 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.